கின்றதே தவிர விருப்பம் இருந்தால்தான் வருமே தவிர வேறு அல்ல. அந்த விருப்பம் இந்த அரசுக்கு இல்லை என் பதைத் திட்டவட்டமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று 8—3—1982 காலை 9.00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும். விவாதம் நீளுமானால் பேரவை மாலையிலும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 11.52 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

4. பேரவை முன் வைக்கப் பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

118. தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனத்தின் 1979—80 ஆம் ஆண்டிற்கான 15—வது ஆண்டறிக்கை (தமிழ், ஆங்கிலம்) [1956 ஆம் ஆண்டு நிறுவனச்சட்டத்தின்) மத்திய சட்டம் 1/1956) 619—ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

119. சென்னை மாநகர அழகிரி நகர்ப் பகுதிக்குரிய விரிவான மேம்பாட்டுத் திட்டத்தையும் அதன் அனைத்து இணைப்புகளையும் பொதுமக்கள் பார்வையிடுதல் குறித்து வீட்டு வசதி நகர்புற வளர்ச்சித்துறையின் 22—12—1980—ஆம் தேதியிடப் பெற்ற 1,600 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு தமிழ்நாடு [1971—ஆம் ஆண்டு நகர் நாட்டுப்புற அமைப்புத் திட்டச் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 35/1972) 123 (2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.]

120. தமிழ்நாடு 1981—ஆம் ஆண்டு தொழில் நிர்வாகச் சட்டத்தினை நடைமுறைக்குக் கொண்டுவருவது குறித்து 24—12—1981—ஆம் தேதியிட்டப்பெற்ற தொழிலாளர்—வேலை

வாய்ப்புத் துறையின் 2813—ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1981—ஆம் ஆண்டு தொழில் நிர்வாகச் (தொழிலாளர்களுக்கு நிரந்தரத்தகுதி அளித்தல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம்—46/1981) 10(4) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.]

121 . தமிழ்நாடு 1981—ஆம் ஆண்டு பிழைப்பு ஊதியச் சட்டத்தை நடைமுறைக்குக் கொண்டுவருவது குறித்து 29—12—1981—ஆம் தேதியிடப் பெற்ற தொழிலாளர்—வேலைவாய்ப்புத் துறையின் 2838—ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1981—ஆம் ஆண்டு பிழைப்பூதியச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 43/1981) 13(2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள் ஏனைய தாள்கள்

எதுவுமில்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS
25 NOV 1982